1978 செப்டம்பர் 7]

மாவட்டம் இருப்பதால், தோட்டக்கலை நன்ருக வளர்ச்சி அடையக் கூடிய சீதோஷ்ண, தட்பவெப்ப நிலை, அம்மாவட்டத்தில் இருப்பதால், தோட்டக் கலையை தர்மபுரியில் வளர்க்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய மேலான யோசனையின் பேரில்தான் தோட்டக்கலையின் பயிர்களை எந்தெந்த மாவட்டத்திலே சிறப்பாகக் கொண்டு வரமுடியும் என்கின்ற திட்டத்தினை ஆராய்ந்து வருகிருேம். மேலும் தர்மபுரி மாவட்டத்திலே, தோட்டக் கலைபயிர்கள், பழவகைகள், மலர் வகைகள் போன்றவைகளை வளர்ப்பதற்கான திட்டமும் ஆராயப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச்சூழல் அசுத்தமாவதைத் தடுப்பது பற்றிய குழு.

* விஞ 78.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுற்றுப்புறச்சூழல் அசுத்தமாவதைத் தடுக்க உயர்மட்ட போர்டு அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் யாவை ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் ; (அ) ஆம்.

(ஆ) இக்கழகம் ஓர் ஆலோசனைக் கூடமாக செயல்பட்டு சுற்றுப்புற சூழ்நிலை பற்றி கொள்கைகளை உருவாக்க அரசுக்கு உதவி செய்து, எல்லாத் துறைகளுக்கும் ஓர் இணைப்பு அமைப்பாக இருந்து சுற்றுப்புறம் மாசுபடுவதை எல்லா விதத்திலும் கவனிக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அக்குழு அரசுக்கு ஏதேனும் பரிந்துரைகள் வழங்கியுள்ளதா ? அப்படி வழங்கியிருந்தால் அந்தப் பரிந்துரைகளைப் பற்றி அறிவிக்க இயலுமா :

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, அக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்தது, ஒரு நீண்ட பட்டியலாக இருப்பதனுல், உறுப்பினர் விரும்புவாராஞல், தனியாக அதைத் தயாரித்து அனுப்புவதற்கு வழி செய்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, இதைப் போலவே தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் சார்பில் சட்டங்கள் ஏதாவது அமைக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுல் அதனுடைய வரையறைகள் என்ன என்பதைச் சொல்ல இயலுமா ?

[1978 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : நீர் மாசுபடும் சிக்கலைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு 1974ஆம் ஆண்டு நீர் மாசு தடுப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி மத்திய நீர் மாசு தடுப்பு வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. அநேக மாநிலங்கள் இந்தச் சட்டத்திற்கான ஒப்புதல் அளித்து மாநில நீர் மாசுத் தடுப்பு வாரியங்களை அமைத்துள்ளன. தமிழ்நாட்டிலும் இந்தச் சட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கலாமா அல்லது ஒரு மாநில சட்டப்படி அமைந்த வாரியம் அமைக்கலாமா என்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்தச் சுற்றுச் சூழ் நிலைகளைக் கட்டுப்படுத்த, 'என்வைரன்மென்ட்டல் பொலூஷன்,' ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட போர்ட் நகரங்களில் இருக்கும் படியான புகை, இவற்றை மட்டும்தான் ஆராயுமா? அல்லது அதோடு தொழிற்சாலைகளிலிருந்து வெளி வருகின்ற புகையைப் பற்றியும் ஆராயுமா? உதாரணமாக, சிமெண்ட் தொழிற் சாலையிலிருந்து வெளிவருகின்ற புகையினால், மரங்களும் கெட்டுப் போகின்றன, மக்களுக்கும் கெடுதல் ஏற்படுகிறது. அதையெல் லாம் இந்த போர்ட் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவ ரவர்களே, அனைத்துத் துறைகளாலும் பாதிக்கப்படுவதை ஆராய்வதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, ஹார்பரி லிருந்து ரெட் ஆக்சைட் வெளி வருவதால், இராயபுரம் பகுதி பூராவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நீண்ட நாள் புகார் இருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அவர் களிடத்திலே தகுந்த ஆதாரங்கள் கேட்டு குறிப்பு அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : இந்த என்வைரன்மென்டல் பொலூஷன்பற்றி கமிட்டி போட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், திருச்சி போன்ற நகரங்களில் மொலா சஸ் வாடையை நிவர்த்திக்காததால் ஹேல்த் ஸ்டேஷனை அது பாதித்திருக்கிறது. இதற்கென அமைக்கப்பட்ட குழு ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது. நிலைமை மோச மாக இருப்பதாலே, ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கும்போதே இந்த நிலையைக் கட்டுப்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவ ரவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன,

1978 செப்டம்பர் 7]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைகளை சுத்தப் படுத்துவதற்காக இறங்கக் கூடியவர்கள், அந்த சாக்கடைகளில் இருந்து வெளிப்படுகின்ற விஷப் புகையின் காரணமாக இறந்து விடுகின்ற நிலைமை இருக்கிறது. அண்மையிலே கூட இரண்டு பேர் இறந்து விட்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படிப் பணிபுரியும் நபர்கள் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பணிபுரிய அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திட அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

* வினா 79—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[அ] காற்றுத் தூய்மை கெடுதல் தடுப்புக் குழு ஒன்றை அரசு அமைத்திருக்கிறதா ?

[ஆ] ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : [அ] மற்றும் [ஆ] : 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் காற்று மாசுபடுவது பற்றி ஆராய அரசு ஒரு குழுவை நியமித்தது. இக்குழு 1972-ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அதிகாரச் சார்பற்றவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு புதிய தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்தப்படுத்தும் முறைகளைப் பரிந்துரை செய்வதிலும் அரசுக்கு ஆலோசனை வழங்கும் முறையில் தண்ணீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்புக் குழுவாக மாற்றியமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட இக்குழு மீண்டும் 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தமிழக ஆளுநரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு சுற்றுப்புறத் தூய்மை வாரியமாக (Th Tam l N du Envir nm nt l B ard) மாற்றியமைக்கப்பட்டு இப்போதும் இயங்கி வருகிறது. தற்போது காற்றுத் தூய்மைத் தடுப்புக்குழு எதுவும் இயங்கவில்லை.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, அந்தக் குழு இராணிப்பேட்டை போன்ற பகுதிகளில், பேர்ணம்பட்டு, ஆம்பூர் பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வருகின்ற அந்த துர்நாற்றம், அந்த வழியாக போகிறவர்களுக்குத் தான் தெரியும்—மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். அந்த அளவுக்கு அது காற்றை அசுத்தப்படுத்தியிருக்கிறது. எனவே அந்தக் குழு அவற்றினைப் போக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ? அல்லது பரிந்துரை செய்திருக்கிறதா ? அல்லது பரிந்துரை செய்ய அரசு அந்தக் குழுவை வேண்டிக்கொள்ளுமா ?